# வ. உ. சி. கண்ட பாரதி



# வ. உ. சி. கண்ட பாரதி

ஆருத் புக்ஸ்

எண் : 4 /1, ராஜாஜி அவென்யூ அனெக்ஸ்,
வளசரவாக்கம், சென்னை - 600 087, தமிழ்நாடு.

"என் உள்ளத்தில் மின்மினிப்பூச்சி போன்று மின்னிக் கொண்டிருந்த தேசபிமான நெருப்பு விளக்குப்போல ஒளிவிட்டுப் பிரகாசித்தது. உணர்ச்சிப் பெருக்கால் இங்கு எழுதியுள்ள இதே வாக்கியத்தை நான் பாரதியாரிடம் சொன்னேன். இதே சமயத்தில் கடற்கரை மின்சார விளக்குகளும் 'பளிச்'சென ஒளிவிட்டு எரிய ஆரம்பித்தன.

பாரதி, "பிள்ளைவாள், சக்தி துணை செய்வாள். நம் உள்ள ஒளி பிரகாசிக்கும்போது மின் ஒளியையும் பிரகாசிக்கச் செய்தது நம் அன்னை பராசக்தியே! அவள் வாழ்க! இனி நம் முயற்சி வெற்றி, எடுத்ததெல்லாம் வெற்றி என்பதற்கான சுப சகுனம் இதுதான். வாழி அன்னை! வாழி அம்மை! சக்தி வாழி!" என ஆவேசம் வந்தவர் போலப் பேசினார். அவர் முண்டாசுக் கட்டின் முன்தானைத் துணி காற்றில் வெற்றிக்கொடி போலப் படபடவென்ற சப்தத்துடன் பறந்துகொண்டிருந்தது. கடல் அலை பேரிரைச்சலிட்டது. உள்ளம் நிரம்பிய மகிழ்வோடு நாங்கள் நால்வரும் திரும்பினோம்.

பின்னர் நாள்தோறும் நான் 'இந்தியா' ஆபீசுக்கும், அதிபர் வீட்டிற்கும் கடற்கரைக்கும் செல்லலானேன்; அதிபரும், ஆசிரியரும் நானும் அவ்வப்போது அளவளாவுவது வழக்கமாகிவிட்டது. சுப்பிரமணிய பாரதியும் நானும் சோமனும் கம்பனுமாயிருந்தது மாறிக் கடைசியில் மாமனும் மருமகனும் ஆயினோம்."

வ. உ. சிதம்பரம்பிள்ளை